[திரு. எஸ். திருநாவுக்கரசு] [*1999 மார்ச் 23*

சென்றிருக்கிறார்கள். தாமரைக்கனிக்கு காயம் இருக்குமேயானால் இங்கே இருந்து சென்ற உடனே ஆஸ்பத்திரியில் சேர்ந்திருக்கலாம். Private ஆஸ்பத்திரியிலோ அல்லது Government ஆஸ்பத்திரியிலோ சேர்த்திருக்கலாம். எங்கே சேர்த்திருக்கிறார்கள் என்றால் Poes Garden-இல் சேர்த்திருக்கிறார்கள். சேர்த்து 5 மணி நேரம் இருந்து, 6 மணிக்கு Police எல்லாம் அங்கே நின்று பிடிக்கப் போனதற்குப் பின்னால்; ஒருவேளை அங்கேயிருந்து கைப்பற்றிவிட்டால், அவர்களைக் கைது செய்தால், மறைத்து வைத்த குற்றம் தன்மேல் வந்துவிடும் என்று பயந்தாரோ என்னவோ தெரியவில்லை; அதற்குப் பிறகு Ambulance-ஐ அப்போலோவிலேயிருந்து வரச்சொல்லி, Ambulance-லே ஏற்றி, ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய்—இங்கே 12 1/2 மணிக்கு நிகழ்ச்சி நடந்தது. ஆறு மணிக்கு மேலே கொண்டுபோய் — உயிருக்கு ஆபத்து என்று கொண்டுபோய், கட்டுப்போட்டு, அதுவும் தலையிலே கட்டுப்போட்டு, அவர்களை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்து, பிரித்துப் பார்த்தால், ஒன்றும் இல்லை என்று அவர்கள் கட்டையெல்லாம் பிரித்துவிட்டு. உட்கார்ந்திருக்கிறார்கள். இப்படி ஒரு பெரிய நாடகமே நிகழ்ந்திருக்கிறது. மக்கள் மத்தியில் சந்தேகம் வர வேண்டுமென்று, உள்நோக்கத்தோடு செல்வி ஜெயலலிதா செய்திருக்கிறார் எனவே, எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் இங்கே இருக்கிறார்கள். நேற்று என்ன நடந்தது என்பதை இரண்டிரண்டு வரியிலே அவர்கள் சொல்ல வேண்டும். இந்தமாதிரி நடந்ததா, இல்லையா என்பதை அவர்கள் சொல்ல வேண்டும். அது நாட்டு மக்களுக்கு விளக்கம் தருகின்ற விதத்திலே அமையும் என்ற காரணத்தினாலே, அந்த வாய்ப்பையும் தந்து, மேலும் இந்தப் பொய் அறிக்கையை, இந்த முரண்பாடான அறிக்கையை, உண்மைக்குப் புறம்பான அறிக்கையை உரிமைக் குழுவிற்கு நீங்கள் அனுப்ப வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

3. தன்னிலை விளக்கம்

பேரவையில் 22-3-1999 அன்று நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து தாமரைக்கனியின் குற்றச்சாட்டுக்களை மறுத்து பொதுப் பணித் துறை அமைச்சரின் விளக்கம்

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு சொன்னதைப்போல,

1999 மார்ச் 23] [திரு. துரைமுருகன்]

தாமரைக்கனி அவர்கள், வெளியிலே சென்று உண்மைக்கு மாறான ஒரு குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார். அதிலே என்னுடைய பெயரையும் இழுத்திருக்கிறார். தாய் எட்டு அடி பாய்ந்தால், குட்டி பதினாறு அடி பாயும் என்பதைப்போல, தலைமை அவ்வளவு பெரிய பொய் சொன்னால், அதையும் விஞ்சுகிற பொய்யை அவர் சொல்லி இருக்கிறார். நேற்றைக்கு இங்கு நடந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் தாக்கப்பட்டு, வடிகின்ற இரத்தத்தைத் துடைத்துக்கொண்டு, காயம்பட்ட அவரை அழைத்துக்கொண்டு போகின்ற அந்தப் பணியை நான் செய்து கொண்டிருந்தேன். இங்கிருக்கிற அதிகாரிகளும் எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற, மாண்புமிகு தலைவர்களும், மற்றவர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், கொஞ்சங்கூட சம்பந்தா சம்பந்தமில்லாமல், இங்கிருந்து அவருடைய கழுத்தை நெரித்து, குலைத்து, 'தொலைந்து போ' என்று சொன்னேன் என்றால், என் கை என்ன பதினாறு அடி நீளமா, பதினேழு அடி நீளமா இருக்கிறது. இப்படிப்பட்ட பொய்யையே அரசியல் மூலதனமாகக் கொண்டு, ஒரு தலைவி, அதற்கேற்ப ஓர் உறுப்பினர், உண்மைக்கு மாறான கருத்தை வெளியிலே தெரிவித்திருக்கிறார். எனவே, நேற்று நடந்த சம்பவத்தில் வீணாக, உண்மைக்கு மாறாக அவர் என்னுடைய பெயரைக் கெடுத்திருக்கிறார் என்பதைத் தங்கள் மூலமாக நாட்டிற்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தக் குற்றச்சாட்டு முழுக்க முழுக்கத் தவறானது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற தலைவர்கள் உணர்வார்கள். பத்திரிகையாளர்களும், தாங்களும் அறிவீர்கள். இதில் கொஞ்சம்கூட உண்மை எதுவும் இல்லை, பொய்யானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இதுகுறித்து தலைவர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்

(அ) உறுப்பினர் திரு. தாமரைக்கனி கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்களைக் கைது செய்கிற உத்தரவைப் பிறப்பிக்கப் போவதாகச் சொன்னேன். அதன்படி, என்னுடைய அறைக்குச் சென்று சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் அவர்களுக்கு ஓர் உத்தரவைப் பிறப்பித்தேன் திரு. தாமரைக்கனி அவர்களைக் கைது